# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2022

FWC

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழ் I / Tamil I | Three hours / Gr -13 (2022) | 72 | T | I | |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி – I

1) மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விரும்பினன் மாதோ
இழை அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டா தாயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் தாளே.

1) இச்செய்யுளில் யாரால், யாரைப் பற்றிஎவ்விடயம் போற்றிப் பாடப்படுகிறது?
2) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள அணி யாது? விளக்குக.
3) பாடப்படுவோனின் சிறப்புக்களாகக் கூறப்படுபவை எவை?

(12 புள்ளிகள்)

ஆ) 'தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னைத்,
"தீவினை"என்ன நீத்துச், சிந்தனை முகத்தில் தேக்கிப்,
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!

1) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
2) தாய்,தாதை என இங்கே குறிப்பிடப்படுவோர் யாவர்?
3) பரதனின் புகழ் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது? (12 புள்ளிகள்)

(12+12 = 24 புள்ளிகள்)



kalvi.lk

2) அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**பாரதியார்**

அ) பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே – அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ

சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே – தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல்

தாமரைக் காடிது நித்தமுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார்

புத்தம் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை – மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம் பிறக்குது நேரினிலே

முல்லை குறிஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய்

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே

அ) பாரதியார் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றார்?
ஆ) பாரதியாரின் பாடல்களின் தனித்துவம் எவ்வாறு எடுத்துக் கூறப்படுகிறது?



kalvi.lk

இ) இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக.

ஈ) கவிஞரின் ஆளுமை எவ்வாறு வெளிப்படுகின்றது?

**அல்லது**

ஆ) ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல் நிலை, பொருளாதார நிலை, சமூக வாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்ப்படுத்திக் கொள்ள முயல்வாராயின் முதலிலே தாமெய்த வேண்டுமென்றெண்ணுகிற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் இது உத்தமக் கவிகளினுடைய கருத்தினை நுனித்து நோக்கி அமைக்குந்தரத்தது இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும் பல தேசத் தொடர்பினுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற் படியும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்க வல்ல உண்மைக் கவியாவான் இத்தகைய ஒரு கவியைத் தமிழ்நாடு பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப் பயனேயாகும் கவியரசராகிய சுப்பிரமணியபாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப்பல வருடங்களாகவில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும்செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்து வருகின்றது இத்தகைய கவி சிரேட்டர்கள் இன்னும் பலரை இந்நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலகமாதாவாகிய பராசக்தியை வேண்டிக்கொள்வோமாக.

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல்கள் மிகப் பலவிருக்கின்றன. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூரவமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கிற வேறு வகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல் நாட்டாசிரியர்கள் தம்மொழியிற் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர். வேத வேதாந்தங்களுக்கு மொழி பெயர்ப்பும், உரையும் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுண்டு, தமிழிலோவென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்குந் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக் கதைகள் மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. சிற்பம், இரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், கணிதம், தருக்கம் என்றின்னன பலவாய துறைகளிலே கடல்போல் விரிந்து கிடக்கின்ற சாத்திரங்களைத் தமிழிலே மொழிபெயர்த்தெழுதினால் அதனால் விளையக்கூடிய நலத்துக்கு எல்லை கூறமுடியுமா? வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழில் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த்தொண்டாகும்.

அ) இவ்வுலகில் எத்தகைய கவிஞர்கள் தோன்ற வேண்டுமெனக் கட்டுரையாசிரியர் விரும்புகிறார்?

ஆ) மேனாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் பற்றியும் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் பற்றியும் ஆசிரியர் யாது கருதுகின்றார்?

இ) இங்கு குறிப்பிடப்படும் உண்மைக்கவி யார்? அவர் ஏன் அவ்வாறு குறிப்பிடப்படுகிறார்?

ஈ) கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றி யாது கூறுவீர்?

(4x4= 16 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

3) திருக்குறள் தெரிந்து செயல்வகை என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) செய்யத்தகுந்த செயலும் அது செய்யும் முறையும்.

ஆ) செய்யக்கூடாத செயலும் அவற்றைச் செய்வதால் ஏற்படும் இழக்கும்

இ) செயலைச் செய்வதற்குரிய வழிமுறையும் அதன் உரிமையும்.

ஈ) கையாளப்பட்டுள்ள அணியின் பொருத்தப்பாடு

(20 புள்ளிகள்)

4) கம்பராமாயணம் குகப்படலத்தில் பரதன் குகனைக் காணப் புறப்படுவதிலிருந்து பரதனை வணங்கிய குகன் அவனைப் புகழ்வது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) குகனைக் காணப் பரதன் புறப்பட்ட விதம்

ஆ) குகன் கண்டு கலங்கிய பரதனின் தோற்றம்

இ) பரதன் வந்த நோக்கத்தைக் கேட்ட குகனின் நிலை

ஈ) பரதனின் பெருந்தன்மை

(20 புள்ளிகள்)

5) அ.ஸ அப்துஸ்ஸமதுவின் எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) இஸ்லாமியப் பண்பாட்டம்சங்கள்

ஆ) ஏழை – பணக்கார வர்க்கமுரண்பாடு

இ) ஸல்மாவின் நடப்பியல் சிந்தனைகள்

ஈ) சிறுகதையாசிரியரின் மொழிநடை (20 புள்ளிகள்)

6) போராசிரியர் க. கைலாசபதியின் ‘மானுடம் தழுவிய கவிஞர்கள்’ என்ற கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகியோர் மகாகவிகள்

ஆ) மகாகவிகளை இனங்கண்டு கொள்வதற்கான அளவுகோல்கள்

இ) பாரதியார் பற்றிய ஆசிரியரின் மதிப்பீடு.

ஈ) ஆசிரியரின் மொழிநடை (20 புள்ளிகள்)

7) ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது என்ற நாவலில்.

அ) கிராமத்து மக்களின் ஏழ்மையும் உழைப்பும்.

ஆ) பெண்களது கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர் கொண்ட அக்கறை.

இ) கிராமத்தை விழிப்படையச் செய்வதில் ஆசிரியர் கொண்ட ஆர்வம்.

ஆகியன வெளிப்படுத்தப்படுமாற்றை விபரிக்குக. (20 புள்ளிகள்)

8) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) சிலப்பதிகாரத்தில் கோவலனின் மனநிலை புலப்படுமாறு

ஆ) கோயில் திருப்பதிகத்தில் மாணிக்கவாசகர் தன்னைத் தாழ்த்திக் கூறுமாறு

இ) அமலனாதிபிரானால் திருவரங்க நாதனின் வடிவழகு கூறப்படுமாறு

ஈ) பாரதியாரின் குயிற்பாட்டில் வாழ்வியல் அம்சங்கள் வெளிப்படுமாறு.

உ) இரு துயரங்கள் நாடகத்தில் Dr. கந்தப்புவின் இயல்புகள் வெளிப்படுமாறு.

(2 x 10= 20 புள்ளிகள்)



kalvi.lk

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
நான்காம் தவணைப் பரீட்சை - 2022
Conducted by Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2022

| தரம் :- 13 (2022) | தமிழ் - II | புள்ளித்திட்டம் |
| --- | --- | --- |

## பகுதி - I

01. 1) புயல்
2) கம்பன்
3) வெட்கம்
4) சங்கம்
5) எ
6) எங்களூர்
7) பூவை
8) பனங்காய்
9) காண்+ட்+ஏன்
10) வினையாலணையும் பெயர்
11) நவீனக்கவிதை
12) கூட்டு வினை
13) இளஞ்சிறார்கள்
14) காரணம்
15) அவன் நிதானமாக நடந்தான்
16) நேற்று வந்தான்
17) ஓடியது
18) எனக்கு நன்றாகப் பாடத் தெரியும்
19) எரி
20) தேர்ச்சி (20x1=20 புள்ளிகள்)

02. அ. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய ஆறுமுகநாவலர், தமிழ் வளர்ச்சிக்கு செய்யுளைவிட உரைநடையே அவசியமென வற்புறுத்தினார். கிறிஸ்தவ மதப் பிரசாரத்தால் சைவ சமயத்திற்கு உண்டான தளர்ச்சியை நீக்க, இவர் சென்னையில் அச்சியந்திரசாலை ஒன்றை அமைத்துப் பல நூல்களைத் திருத்தமாகப் பதிப்பித்தார். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் கட்டுரைகள், கண்டனங்கள், மாணவர்களுக்கேற்ற நூல்கள் முதலியவற்றை உரைநடையில் எழுதினார். இவரது உரைநடையில் பழைமையும் புதுமையும் கம்பீரமும் எளிமையும் ஒருங்கே காணப்பட்டன. இதனால் இவர் வசனநடை கைவந்த வல்லாளர் எனப் பாராட்டப்படுகின்றார்.

(13 புள்ளிகள்)

ஆ. 1) நிலவுடமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு
நிலவுடமையாளர்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடு
2) நிலவுடைமைக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தொடர்பான ஆவணங்கள்
3) நிலவுடைமையாளர்களுக்கு இடையில் ஏற்படும் முரண்பாடுகளின் தொகுப்பாகும்.
4) உச்சநிலையான சுரண்டல்
உச்சநிலை உற்பத்தி
உற்பத்திச் சாதனமாகிய நிலத்தை மேன்மேலும் பெருக்கிக் கொண்டே போக வேண்டும் என்ற எண்ணம்
5) நிலவுடமையாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக
6) கடம்பர், கேரளர், பாணர், பாண்டியர், சம்பு வரையர், ஹொய்சலர் ஆகிய நாட்டு நிலவுடைமையாளர் கலகங்களினால் சோழப் பேரரசு சிற்றரசாக மாறியமை
(6x2=12 புள்ளிகள்)



kalvi.lk

03. பொருள் - 12 புள்ளி
மொழிநடை - 8 புள்ளி
அமைப்பு - 5 புள்ளி / 25 (25 புள்ளிகள்)

## பகுதி - II

04. அ) ஆசாரக் கோவை
இன்னா நாற்பது
இனியவை நாற்பது
ஏலாதி
சிறுபஞ்சமூலம்
திருக்குறள்
திரிகடுகம்
நாலடியார்
நான்மணிக்கடிகை
பழமொழி நானூறு
முதுமொழிக் காஞ்சி

- ➢ அறக்கருத்துக்களைப் பேசுபவை
- ➢ நேரடியாக அறக்கருத்துக்களைப் போதிப்பவை
- ➢ பழமொழிகள், கதைகளினூடாக மறைமுகமாக அறக்கருத்துக்களைப் போதிப்பவை
- ➢ வெண்பா வடிவில் அமைந்தமை
- ➢ தொடர்நிலைச் செய்யுள்களாக அமைந்தமை

(3 புள்ளிகள்)

ஆ) 1) காவியப் பண்புகள் கொண்ட இலக்கியங்களின் தோற்றம்
2) தன்னிகரில்லாத் தலைவனின் வாழ்க்கை கூறப்படுவது
3) எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்று கூறுவன
4) சிலப்பதிகாரம், மணிமேகலையின் தோற்றம்

(5 புள்ளிகள்)

இ) தமிழில் தோன்றிய முதலாவது காவியம் இளங்கோ அடிகளால் பாடப்பட்டது.
மூன்று காண்டங்கள், 30 கதைகள் தொடர்நிலைச் செய்யுள்

(7+5+3=15 புள்ளிகள்)

05. அ)

| சிற்றிலக்கியங்கள் | உரைநடை இலக்கியங்கள் | இலக்கண நூல்கள் |
|---|---|---|
| முத்தொள்ளாயிரம் | ஸ்ரீ புராணம் | |
| பாண்டிக் கோவை | கஜசிந்தாமணி | சங்கயாப்பு |
| பாரத வெண்பா | இறையனார் | பாட்டியல் நூல் |
| கொங்குவேளிர் மாக்கதை | களவியலுரை | |
| நந்திக்கலம்பகம் | | |

ஆ)
- மன்னர் புகழ்பாடுதல்.
- அக, புறப்பொருள் மரபு கலந்து வருதல்
- பல இலக்கிய வடிவங்கள் - கோவை, வெண்பா…….
- மணிப்பிரவாள நடை
- தொடர்நிலைச் செய்யுள்

(7 புள்ளிகள்)

இ) இறைவன் மீது கொண்ட அன்பையும் ஈடுபாட்டையும் அவன் சார்ந்த தம் உணர்ச்சி அனுபவங்களையும் இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தியமை.
விஷ்ணுவின் திருமேனி அழகினைப் பாடலினூடாக வெளிப்படுத்தியவை
கருப்பூரம் நாறுமோ…..
இறைவனை நெருங்கிய உறவு நிலையில் வைத்துப் பாடியமை
கைக்கிளை, பெருந்திணைப் பயன்பாடு

(5+6+4=15 புள்ளிகள்)



kalvi.lk

06. அ) • சோதிட நூல்கள் – சரசோதி மாலை
செகராச சேகர மாலை

• வைத்திய நூல்கள் - செகராச சேகரம்
பரராசசேகரம்

• வரலாற்று நூல்கள் - வையா பாடல்
கைலாய மாலை
கோணேசர் கல்வெட்டு

• தல புராணங்கள் - தட்சண கைலாச புராணம்
திருக்கரசைப் புராணம்

• மொழி பெயர்ப்பு - இரகுவம்சம்

• பொதுமக்கள் சார்ந்த இலக்கியங்கள் - கதிரை மலைப்பேள்ளு
கண்ணகி வழக்குரை

(6 புள்ளிகள்)

ஆ) - வரலாற்றுணர்வு
- தலபுராண மரபு
- சமயச் சார்பு
- சாதாரண மக்கள் வாழ்க்கை இலக்கியங்களில் இடம்பெற்றமை
- நாட்டார் இலக்கிய முறைமையின் செல்வாக்கு – கதிரை மலைப்பள்ளு
- இலக்கியங்களில் தேசிய உணர்வைப் பாய்ச்சும் முயற்சி காணப்பட்டமை

உ + ம் தட்சணகைலாய புராணம்
கதிரை மலைப்பள்ளு

- வித்துவச் சிறப்பு காணப்பட்டமை - இரகுவம்சம்
- மொழி பெயர்ப்பு முயற்சி - இரகுவம்சம் (5 புள்ளிகள்)

இ) - கண்ணகியைத் தெய்வமாகப் போற்றும் நோக்குடன் எழுந்தது
- சிலப்பதிகாரமும் கண்ணகி வழக்குரையும் ஒரே கதைக் கருவைக் கொண்டமைந்தாலும் சொல்லும் முறையிலும் கையாளப்படும் உத்திகளிலும் பலவேறுபாடுகளைக் கொண்டு விளக்குகினறன.
- இன்றும் கூட மட்டக்களப்புப் பகுதியிலுள்ள கோயில்களில் பக்தர்கள் முன்னிலையில் பயிலிடப்பட்டு வருகின்றது.

(6+5+4= 15 புள்ளிகள்)

07. அ) • படைப்புக்கள் - தமிழ் சார்ந்தவை

• இலக்கிய வழி, கம்பராமயணக்காட்சி என்னும் கதை தழுவிய கவிநயக் கட்டுரை.
சுமயம் சார்ந்த படைப்புக்கள்

• அத்வைத சிந்தனை, அன்பின் ஐந்திணை, சிந்தணைக் களஞ்சியம், சிந்தனைச் செல்வம், நாவலர், ஆறுமுக நாவலர், கோவலர், கதிர்காம வேலவன் பவனி வருகிறான்.

• சமூக- பண்பாடு சார்ந்தவை

• கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை, சைவநற்சிந்தனைகள்
உரையாக்கம்

• கந்த புராண தக்ஷகாண்டவுரை (6 புள்ளிகள்)

ஆ) பக்திப் பாடல்கள்

• பெரும்பாலான பாடல்களின் அடிநாதம் பக்தியுணர்வு
• அஞ்சு முகத்தவர் கொஞ்சி முகந்திடும் ஆறு முகப்பதுமம் …. என்று 18 ஆவது வயதில் முருகனைப் போற்றிப்பாடத்தொடங்கியவர்.
• பத்தாயிரத்துக்கு மேற்பட்டபாடல்கள்
• நவாலி அட்டக்கிரிப்பதிகம், நல்லையந்தாதி, கதிர்காம வேலவர் பதிகம், நல்லூர் முருகன் திருப்புகழ், திருக்கேதீஸ்வரப் பதிகம்

சிறுவர் பாடல்கள்

• கத்திரி வெருளி, ஆடிப்பிறப்பு, பவளக் கொடி, மனம் நிறைந்த செல்வன்,இலவு காத்த கிளி, வாழையும் புலவனும், புழுக்கொடியல் எலியும் சேவலும் - இவரது சிறுவர் பாடல்கள் சிறுவர் செந்தமிழ் என்ற நூலில் இடம்பெற்றுள்ளன.

தேசிய – சமூகக் கவிதைகள்

- இலங்கைவளம், மரதன் அஞ்சலோட்டம், தால விலாசம் செந்தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள், தொல்புரம், மனைத்தொழில் விருத்தி, ஐக்கிய சங்க வேலைகள், பனைமரக்கும்மி, பஞ்சமில்லை
- பழந்தமிழ் செய்யுள் மரபினைப் போற்றுதல்
- கவித்துவம் நிரம்பிய பிரபந்தங்களை இயற்றியமை
- குழந்தைப் பாடல்களுக்கு வழிகாட்டி

இ) சிறுகதைத் தொகுப்புக்கள் - ஊர் நம்புமா
கண்களுக்கு அப்பால்
தரிசனம்
நந்தியின் கதைகள்

நாவல்கள் - மலைக்கொழுந்து
தங்கச்சியம்மா
நம்பிக்கைகள்
பச்சை வேலி

மருத்துவ அறிவுரை நூல்கள் - அருமைத் தங்கைக்கு
அன்புள்ள நந்தினி
நந்தினி உன் பிள்ளை
உங்களைப் பற்றி

நாடகம் - குரங்குகள்

ஈ) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாவது தமிழ்ப் பேராசிரியர்
தமிழறிஞர்கள் பலரை உருவாக்கியமை.
தமிழிலக்கிய வரலாறு
தமிழ் உரைநடை வரலாறு
நவீன இலக்கியத்திறனாய்வின் முன்னோடி
தமிழிலக்கியங்களும் பக்திப்பாடல்களும் (2+7+6 = 15 புள்ளிகள்)

08. அ) 1) மாபெரும் என்பது வாகனங்களா ஏல விற்பனையா என்பது மயக்கமாக உள்ளது ஆகவே வாகனங்களின் மாபெரும் ஏலவிற்பனை நாளை மறுதினம் நடைபெறும்.
2) நடை, நடத்தல், நடந்தவன்
3) கால வழு
வருகிறார் - வருவார்
4) சங்கீதத்தால் நம் உள்ளங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.
5) பாடசாலை இலச்சினை
கட்டிட இடிபாடுகள் (5x2 = 10 புள்ளிகள்)

ஆ) ஆறாம் வேற்றுமை

- வேற்றுமை உருபு – அது, ஆது, அ
- சொல்லுருபு – உடைய
- பொருள் - கிழமைப் பொருள் தற்கிழமை
பிறிதின் கிழமை

மாற்றொலியன்

- ஒன்றுக்கு அதிகமான ஒலிப்பு உடையன
- வல்லின மெய்கள் ஆறும் மாற்றொலியன்கள் ஆகும்.
- ( வல்லின மெய்கள் வேறுபட்டு ஒலிப்பதை உதாரணங்களுடன் விளக்குதல்)

இடைநிலை மெய்மயக்கம்

- வரைவிலக்கணம்
- வகைகள்
- உதாரணங்கள் (5 புள்ளிகள்)

(10+ 5 = 15 புள்ளிகள்)



kalvi.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 20222

| தரம் :- 13 (2022) | தமிழ் - I | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி - I

1) அ. 1) ஔவையாரால், அதியமானை நோக்கி, அதிமானின் கொடையைப் போற்றிப் பாடப்படுகிறது.

2) • உவமையணி

'யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போலக் கையகத்தது அது பொய்யாகாதே' என்ற அடிகளில் உவமையணி கையாளப்பட்டுள்ளது.

உவமேயம் - அதிமானின் கொடை

உவமானம் - யானை தன் கோட்டிடை வைத்த கவளம்

பொதுத்தன்மை - தவறாது உரிய இடத்தைச் சேர்தல்.

3) • விருந்தினர் எத்தனை முறை வந்தாலும் இனிதுவந்து வரவேற்று உபசரிப்பவன்.
• தன்னை நாடி வருவோருக்குத் தவறாது பரிசில் வழங்குவான்.
• அணிகலன் பூண்ட யானைப்படையையும், தேர்ப்படையையும் உடையவன்.

(3x4=12 புள்ளிகள்)

ஆ) 1) பரதனது பெருந்தகைமையை அறிந்த குகன் அப்பரதனை வணங்கிப் புகழ்ந்த போது.
2) கைகேயி, தசரதன்
3) ஆயிரம் இராமர்களுக்கும் மேலானவன்.

(3x4=12 புள்ளிகள்)

2) அ. பாரத நாடெனும் வாவியில் பூத்த தாமரை மலர் நறுமலர்.

ஆ. ஆயிரம் செங்கதிர் போலொளி பரப்புவது
உயர் சிந்தனையாமெனும் வானுலகேறித் திளைத்திட வைக்கும்.
புத்தம் புதிய சுவை முன்னர் எதுவும் இச்சுவை தந்ததில்லை
கல்லையும் உருக்குவது மாடும், மரங்களும் கேட்டு மயங்குதல்

3) உருவக அணி – பாரதி என்றொரு தாமரை
பாரத நாடெனும் வாவி
சிந்தனையாமெனும் வானுலகு

உவமையணி – சாரலருவிகள் போல்
சந்தமிகுந்திடு சிந்தென
புத்துயிர் போல்



kalvi.lk

4) • பாரதியார் கவிதைகளில் திளைத்த அனுபவத்தின் வெளிப்பாடு
- உவமை, உருவக அணிப்பயன்பாடு
- பண்டைத் தமிழிலக்கியப் பரிச்சயம் - முல்லை குறிஞ்சி யின மருதம்
- சந்தச் சிறப்பு
- மொழியாளுகை
- சொற்களால் காட்சிகளை முன்னிறுத்தல் - மாடு மரங்களும்..

(4 x 4 = 16 புள்ளிகள்)

ஆ) அ) இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும் பல தேசத் தொடர்பினுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற்படும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடைய கவிஞர்கள்.

ஆ) மேனாட்டு மொழிகளில் பயனுள்ள நூல்களும் தமிழில் சூத்திரருக்கும் பெண்களுக்கும் தகவுடைய நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

இ) சுப்பிரமணிய பாரதியார்
இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும் பல தேசத் தொடர்கினுக்கும் இயைபாகும் படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்தில் படியும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவராக விளங்கியமை

ஈ) வாசகரை முன்னிலைப்படுத்தி விளித்தல்
எடுத்துக்காட்டுக்களைக் கையாண்டிருத்தல்
தர்க்க ரீதியான சிந்தனையைக் கட்டியெழுப்புதல்
வினாக்களை வினாவி, தம் கருத்தை வலியுறுத்துதல்.

(4 x 4 = 16 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி II

3) அ) 1 – 2 குறள்கள்
ஆ) 3 – 5 குறள்கள்
இ) 7 -10 குறள்கள்
ஈ) 5ஆவது குறள்
உவமையணி

- உவமேயம் - செயலின் வகைகள் எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்காமல் அரசன் போருக்கு எழுதல்.
- உவமானம் - பயிர் செய்யும் நிலத்தில் பயிரை வளர்க்கப் பாத்தி வகுத்தல்.
- பொதுத்தன்மை – நிலைபெறச் செய்வதற்கு வழிவகுத்தல்

(4+6+8+2=20 புள்ளிகள்)

4) அ) சுமந்திரன் குகனின் நற்குணங்களை எடுத்துக் கூறியவுடனேயே குகனைக் காணப் பரதன் புறப்படுகின்றமை
தன்னைக் குகன் வந்து பார்ப்பதற்கு முன்னரே தானே சென்று அவனைப் பார்ப்பதற்காகக் கூறிப் புறப்படுகின்றமை.

ஆ) மரவுரி தரித்தமை
புழுதி படிந்த உடல்
ஒளியை இழந்த முகம்
கல்லும் கரைந்து உருகும் படியான துசயருடைமை

இ) மனதில் மிகுந்த மகிழ்ச்சி கொள்ளுதல்
உடம்பு பூரித்தல்
தரையில் விழுந்து வணங்குதல்
பரதனது திருவடிகளில் கைகளை வைத்து வணங்குதல்
பொய்யற்ற தூய மனதுடன் பேசத் தொடங்குதல்



kalvi.lk

ஈ) உலகம் முழுவதையும் ஒரு குடை நீழலில் ஆட்சி செய்த தசரதச் சக்கரவர்த்தி தன் மரபில் முன்னோர் பேணி வந்த நீதிமுறையிலிருந்தும் தவறி விட்டான் அந்த அநீதியை நீக்கும் பொருட்டுப் பரதன் செயற்பட்டமை. (4 x 5=20 புள்ளிகள்)

5) அ)
- பண்டிகை கொண்டாடுதல்
- புத்தடை அணிதல்
- பருவடைமந்த பெண் பிள்ளைகள் புடைவை அணிதல்
- சமய வழிபாடுகளில் ஈடுபடுதல்
- ஏற்கப்பட்டவைகளையும் விலக்கப்பட்டவைகளையும் அறிந்து நடத்தல்
- சமத்துவக் கோட்பாடு

ஆ)
- பணக்காரர் ஏழைகளின் உழைப்பைச் சுரண்டுதல்
- பணக்காரரால் ஏழைகளின் உரிமைகள், ஆசைகள் மறுக்கப்படுதல்
- ஏழைகளின் அடிமை வாழ்வு
- சமூக ஏற்றத்தாழ்வு

இ)
- தாய்மையுணர்வு பற்றிய சிந்தனை
- வாழும் உரிமை பற்றியது.
- ஏழை – பணக்கார வர்க்க வேறுபாடு
- சமத்துவக் கோட்பாடு பற்றியது

ஈ)
- இலகுவான மொழி நடை
- உணர்வு பூர்வமான மொழிநடை
- வட்டார வழக்குச் சொறகள்
- தர்க்கரீதியான மொழிநடை (4 + 7 + 9 = 20 புள்ளிகள்)

6) அ)
- பாரதியின் கவிதைப் புலமையை எடுத்துக்காட்டி அவரே வள்ளுவர், இளங்கோ, கம்பர் மூவரையும் தமிழ்ப் பெருங்கவிஞர்களாகக் கருதியமையைச் சுட்டிக் காட்டி விளக்குகின்றார்.
- பொதுமை உணர்வுடன் இலக்கியங்களைப் படைத்தமை

ஆ)
- மொழியாற்றல்
- பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படுதல்.
- பொதுமையுணர்வு
- காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்தல்

இ)
- அனைத்திந்தியக் கவி,
- உலகம் பெருங் கவிஞன்
- பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருத்தல்
- தன்னளவிலும் தனது சமுதாயத்தைப் பொறுத்த அளவிலும் அடிமைத் தனத்தை அறிந்தவன்.

ஈ)
- தர்க்கரீதியான மொழிநடை
- ஐயப்பாட்டுக்கு இடமில்லாத தெளிவான மொழிநடை
- இலகுவான மொழிநடை

(4 x 5 = 20 புள்ளிகள்)

7) அ)
- பின்தங்கிய கிராமம்
- கடின உழைப்பு
- பெண்களின் கடின உழைப்பு
- பரம்பரை பரம்பரையாக ஏழ்மை கடத்தப்படுதல்
- அடிப்படை வசதியின்மை.

ஆ)
- பெண்கள் பராயமடைந்ததும் கல்வி இடை நிறுத்தப்படுவதைக் கண்டித்தல்.
- கிடுகு வேலிக்குள்ளால் உலகத்தைப் பார்க்கும் பெண் சமூகத்துக்காக வருந்துதல்.
- சௌந்தரம் என்ற பாத்திர வார்ப்பினூடாகப் பெண்கல்வி தொடர்பாகப் பெண்களைச் சிந்திக்கத் தூண்டுதல்.


kalvi.lk

- தாமோதரம் என்ற பாத்திர வார்ப்பினூடாக இடை நிறுத்தப்பட்ட பெண்கல்வியைத் தொடர வைத்தல்.

இ)
- புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தாமோதரம் கிராமப் பாடசாலையிலிருந்து நகரப் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றல்.
- சிறுவயதுத் திருமணத்தால் ஏற்படும் துன்பங்கள்
- பெண்ணின் கல்வி, உயர்வு, பெண் விடுதலை
- சாதிப் பாகுபாடு, மூடநம்பிக்கைகளிலிருந்து விடுபடுதல்
- கல்வி மேம்பாடு. (6+7+7 = 20 புள்ளிகள்)

8) அ)
- தான் செய்த தவறுகளை உணர்ந்து வருந்துதல்.
- கண்ணகி மீது பரிவும் பாசமும் கொள்ளுதல்.
- தன்னால் பிறர் துன்பத்தை அனுபவிக்கக் கூடாது என எண்ணுதல்.
- ஆறுதலைத் தேடி அலைதல்
- தன்மீது தானே வெறுப்புக் கொள்ளுதல்
- கண்ணகியை மகிழ்ச்சியாக வாழ வைக்க வேண்டும் என எண்ணுதல்
- மீண்டும் வணிகத் தொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பைத் தேடுதல்.

ஆ)
- என்பரம் அல்லா இன்னருள் தந்தாய் யான் இதற்கு இலனோர் கைம்மாறு
- உரையுணர்விறந்து நின்றுணர்வதோர் உணர்வேயானுன்னை உரைக்கு மாறுணர்ந்தே
- இறைவனே நீயென் உடங் கொண்டாய் இனியுன்னை என்னிரக்கேனே.
- யாருறவெனக்கு இங்கு ஆர் அயலுள்ளார்.
- யாது நீ போவதோர் வகையெனக் கருளாய்

இ)
- திருக்கமலப் பாதம் வந்தென் கண்ணிலுள்ளன ஒக்கின்றதே
- சிவந்த ஆடையின் மேல் சென்றதாமென் சிந்தனையே
- எழில் உந்தி மேலதன்றோ அடியேனுள்ளத் தின்னுயிரே
- திருவயிற்றுதர பந்தனமென்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே
- திருவார மார்பு அது அன்றோ அடியேனை ஆட்கொண்டதே
- முற்றும் உண்ட கண்டங்கண்டீர் அடியேனை உய்யக் கொண்டதே
- செய்யவாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததே
- பெரியவாய் கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே
- நீலமேனி ஐயோ நிறை கொண்டதென் நெஞ்சினையே
- என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே

ஈ)
- ஏற்றம் இறைத்தல்
- கும்மி கொட்டுதல்
- வயலில் வேலை செய்தல்
- சுண்ணமிடித்தல்
- நெல்லிடித்தல்

உ)
- பிள்ளைப்பாசம் மிகுந்தவர்
- முரண்பாடுகளைத் தவிர்ப்பவர்
- பிறரது உரிமைகளை மதிப்பவர்
- நாகரிகமாக நடந்து கொள்பவர்
- மன்னிப்புக் கோரும் பண்புடையவர்
- உணர்ச்சிகளை வெளிக்காட்டாமை

(10x2 = 20 புள்ளிகள்)



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page